17.09.2016

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### உரமாகும் கடல்பாசிகள்

2010ம் ஆண்டு ஐ.நா., உணவு மற்றும் வேளாண்மை அறிக்கையின் படி, பசுமை கடல்பாசிகள் சிறந்த உயிரி எரிபொருளாக அமையும் என கூறப்பட்டுள்ளது. கடல் பாசிகள் தற்போது யூரியா, பொட்டாஷ்க்கு பதிலாக இயற்கை உரமாகவும் பயன்படுத்தப்படுகிறது. உவர் நிலத்தால் நெல் விவசாயத்தை கைவிட்ட விவசாயிகளுக்கு மாற்று விவசாயமாக கடல்பாசி விவசாயம் பரிந்துரை செய்யப்படுகிறது. பருவநிலையைப் பொறுத்து நெல் விலை ஏற்ற இறக்கமாக அமைகிறது. ஆனால் கடல்பாசி விலை அவ்வாறு இல்லை. எப்போதுமே லாபத்தையே தருவதால் நெல்லுக்கு பதிலாக கடல் பாசியை விளைவிக்க மேற்குவங்கத்தில் விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர்.

### வன விரிவாக்க மையத்தில் 1.5 லட்சம் மரக்கன்றுகள் வளர்ப்பு

மொடக்குறிச்சி: அரச்சலூர் வன விரிவாக்க மையத்தில், தனியார் நிலங்களில் நட, 1.5 லட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இதுகுறித்து வனவிரிவாக்க மைய அலுவலர் சண்முகம் கூறியதாவது: தனியார் நிலங்களில் வளர்க்க, ஆண்டுதோறும் மரக்கன்றுகள் உற்பத்தி செய்கிறோம். குள்ளரங்கம்பாளையத்தில், 80 ஆயிரம், தலவுமலையில், 70 ஆயிரம் என, 1.5 லட்சம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்த விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும். மரங்களை நல்லமுறையில் வளர்த்தால், ஊக்கத் தொகையாக, ஒரு ஏக்கருக்கு, 1,000 ரூபாய் வழங்கப்படும். தகவலுக்கு என்னை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு கூறினார்.

## வேளாண் கடன் தள்ளுபடி சான்று

ஈரோடு: ஈரோடு, திண்டல் மலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், வேளாண் கடன் பெற்ற, 444 பேருக்கு, தமிழக அரசு உத்தரவுப்படி, 1.55 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதற்கான சான்று வழங்கும் விழா நேற்று நடந்தது. சங்க தலைவர் கே.ஆர்.பழனிசாமி வரவேற்றார். துணை மேயர் பழனிசாமி தலைமையில், எம்.எல்.ஏ., ராமலிங்கம் சான்று வழங்கினார். தவிர, நடப்பாண்டுக்கான புதிய கடன்களும் வழங்கப்பட்டன.

## கோமாரி தடுப்பூசி முகாம்: கால்நடைகளுக்கு சிகிச்சை

கரூர்: மசக்கவுண்டன்புதூரில் நடந்த கோமாரி தடுப்பூசி முகாமில், 230 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் டி.என்.பி.எல்., சார்பில் கால்நடைகளுக்கு, 11வது சுற்று தீவிர கோமாரி நோய் தடுப்பூசி முகாம் மசக்கவுண்டன்புதூரில் நடந்தது. முகாமிற்கு, கால்நடை துறை மண்டல இணை இயக்குனர் பழனிவேல் தலைமை வகித்தார். உதவி இயக்குனர் (நோய் புலனாய்வு) முருகேசன், டி.என்.பி.எல்., நிறுவன பொதுமேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன், கால்நடை டாக்டர் கல்பனா உள்பட பலர் கலந்து கொண்டனர். முகாமில், 230 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

## இறங்கு முகத்தில் பெரியாறு அணை நீர்மட்டம்

கம்பம், முல்லைப் பெரியாறு அணை பாசனத்தில் 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பில் இருபோக நெல் சாகுபடி நடைபெறுகிறது. கூடலூரில் துவங்கி பழநிசெட்டிபட்டி வரை உள்ள இந்த சாகுபடி பரப்பில் இதுவரை 80 சதவீதம் முதல் போக நடவு முடிந்துள்ளது.
கம்பம் வட்டாரத்தில் அனுமந்தன்பட்டி, புதுப்பட்டி, மேலக்கூடலூர் பகுதிகளில் நெருக்கி நடவு பணிகள் முடிந்துள்ளது.

சின்னமனூர், சீலையம்பட்டி, வீரபாண்டி, கோட்டூர், பழனிசெட்டிபட்டி போன்ற பகுதிகளிலும் நடவு பணிகள் நடந்து வருகிறது. கம்பம் சின்னவாய்க்காலில் ஆயிரத்து 400 ஏக்கர், குச்சனூரில் 400, மார்க்கையன்கோட்டையில் 400, உத்தமுத்து வாய்க்காலில் 400, உத்தமபாளையம் வாய்க்காலில் 400, கூடலூர்

வைரவன் வாய்க்காலில் 700 ஏக்கர் என இதுவரை 10 ஆயிரம் ஏக்கர் நடவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 4 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நடவு பணிகள் நடைபெறவில்லை.

ஆரம்பமே போராட்டம்

வைகையில் நீர்மட்டம் மிக குறைவாக இருந்ததால், மதுரையின் குடிநீருக்கென தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. எனவே வேறு வழியின்றி முறைப்பாசனம் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் கம்பம் பகுதியில் முன்கூட்டியே நடவு செய்ததால் இப்பகுதியை சேர்ந்த விவசாயிகளுக்கு இன்னமும் 30 முதல் 50 நாட்களுக்கு தண்ணீர் தேவைப்படுகிறது. கம்பத்தை தவிர்த்து உத்தமபாளையம், அனுமந்தன்பட்டி, சின்னமனூர், வீரபாண்டி போன்ற பகுதிகளுக்கு தண்ணீர் 2 மாதங்கள் முதல் 3 மாதங்கள் வரை தேவைப்படும்.

மழையின்றி அணையின் நீர் மட்டம் மளமளவென சரிந்து வருகிறது. நேற்று நிலவரப்படி 114.70(மொத்த உயரம் 152 அடி) அடியாக இருந்தது. அணைக்கு 213 கனஅடி வரத்தும், அணையில் இருந்து 500 கனஅடியும் எடுக்கப்படுகிறது. இந்நிலையில் வாரந்தோறும் 3 நாட்களுக்கு மதுரைக்கு குடிநீருக்கென வாய்க்கால்களை அடைத்து எடுத்து செல்கின்றனர்.

பொதுப்பணித்துறையினர் கூறுகையில், 'பெரியாறு அணையின் நீர் மட்டம் குறைந்து வருகிறது. வடகிழக்கு பருவமழை அக்டோபர் மூன்றாவது வாரத்தில் துவங்கும் என்று எதிர்பார்க்கின்றோம். ஆனால் இப்போதுள்ள நீர்மட்டம் நிலவரப்படி இன்னமும் 20 நாட்களுக்கு மட்டுமே விவசாயத்திற்கு தண்ணீர் தரமுடியும். மதுரை மற்றும் தேனி மாவட்டத்தின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளதே அதற்கு காரணம். வடகிழக்கு பருவமழை பெய்யும் என்று நம்பிக்கையுடன் உள்ளோம்,' என்கின்றனர்.

## மேட்டூர் அணையில் செப்., 20ல் நீர் திறப்பு: பருவமழை சம்பாவுக்கு கைகொடுக்குமா?

மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து, சம்பா சாகுபடிக்கு, செப்., 20ல் நீர் திறக்க, தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ள நிலையில், வடகிழக்கு பருவமழை கைகொடுத்தால் மட்டுமே, சாகுபடியை பூர்த்தி செய்ய முடியும் என்ற சூழல் நிலவுகிறது.

மேட்டூர் அணையில் இருந்து, ஜூன், 12ம் தேதி டெல்டா சாகுபடிக்கு நீர் திறக்க வேண்டும். நடப்பாண்டு, அணை நீர் இருப்பு குறைவாக இருந்ததால், நீர் திறக்கவில்லை. இதனால், டெல்டாவில், 2.5 லட்சம் ஏக்கரில், குறுவை சாகுபடி பாதித்தது. டெல்டாவில், செப்டம்பர் இறுதியில், விவசாயிகள் சம்பா சாகுபடி துவங்குவர். ஆனால், மேட்டூர் அணை நீர் இருப்பு குறைவாக இருந்ததால், சம்பா சாகுபடிக்கு, நீர் திறப்பதில் சிக்கல் ஏற்பட்டது. இந்நிலையில், உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, கர்நாடகாவின் கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளில் இருந்து, மேட்டூர் அணைக்கு நீர் திறக்கப்பட்டது. இதனால், கடந்த, எட்டு நாட்களில், மேட்டூர் அணை நீர் இருப்பு, எட்டு டி.எம்.சி., அதிகரித்தது. நேற்று அணையின் நீர்மட்டம், 84.76 அடியாகவும், நீர் இருப்பு, 46.86 டி.எம்.சி.,யாகவும் உயர்ந்தது. இதனால், மேட்டூர் அணையில் இருந்து, சம்பா சாகுபடிக்கு, செப்., 20ம் தேதி நீர் திறக்க, தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். கர்நாடகா ஜூன், 1 முதல், நேற்று வரை, 115 டி.எம்.சி., நீர், மேட்டூர் அணைக்கு வழங்க வேண்டும். நேற்று வரை, 46 டி.எம்.சி., நீர் மட்டுமே வந்துள்ளது. இன்னும், 69 டி.எம்.சி., நீர் வர வேண்டியுள்ளது. டெல்டாவில், 13.10 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நடக்கும் சம்பா சாகுபடியை முழுமையாக முடிக்க, குறைந்தபட்சம், 100 டி.எம்.சி., நீர் தேவை. தற்போது, மேட்டூர் அணையில், 46.86 டி.எம்.சி., நீர் உள்ளது. சம்பா சாகுபடிக்கு, இன்னமும், 50 டி.எம்.சி.,க்கும் மேல் தண்ணீர் தேவை. மேட்டூர் அணையில், தண்ணீர் திறக்க, அரசு உத்தரவிட்டாலும், வடகிழக்கு பருவமழை கைகொடுத்தால் மட்டுமே, சம்பா சாகுபடிக்கு, முழுமையாக தண்ணீர் வழங்க முடியும் என்ற சூழ்நிலை உள்ளது.

## மானிய விலையில் வழங்க 13 டன் விதை நெல் தயார்

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில், கிலோவுக்கு, 10 ரூபாய் மானியத்தில், சம்பா சாகுபடிக்கு தேவையான விதை நெல், விவசாயிகளுக்கு வழங்க, தயார் நிலையில் உள்ளது.

பனமரத்துப்பட்டி வட்டார வேளாண் உதவி இயக்குனர் விஜயலட்சுமி கூறியதாவது: விதை கிராம திட்டத்தில், சம்பா சாகுபடிக்கு தேவையான, ஏ.டி.டி.,(ஆர்) - 45, கோ(ஆர்) - 48, 50, 51 மற்றும் டி.ஆர்.ஒய்., - 3 ரக நெல் விதைகள், ஒரு கிலோவுக்கு, 10 ரூபாய் மானியத்தில், விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. அவர்களுக்காக, வேளாண் விரிவாக்க மையத்தில், 13 டன் விதை நெல், இருப்பு வைக்கப்பட்டுள்ளது. வேளாண் வளர்ச்சி திட்டம், உணவு பாதுகாப்பு திட்டத்தில், பயிர் வளர்ச்சிக்கு தேவையான உயிர் உரங்கள் மற்றும் திரவ உயிர் உரங்கள், 50 சதவீதம் மானியத்தில், விவசாயிகளுக்கு வழங்க, தயார் நிலையில் உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## நெல்லிக்காய் மதிப்பூட்டிய பொருள் தயாரிப்பு பயிற்சி

ராமநாதபுரம் : நெல்லிக்காயை பயன்படுத்தி மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பது குறித்து விவசாயிகளுக்கு இலவச பயிற்சி அளிக்கப்பட்டது.தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும், ராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் மையம் சார்பில், நெல்லிக்காயில் இருந்து மதிப்பூட்டப்பட்ட நெல்லிக்காய் ஜூஸ், மிட்டாய் போன்ற உணவுப் பொருட்கள் தயாரிப்பது குறித்த இலவச பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் 40 விவசாயிகள் பங்கேற்று பயிற்சி பெற்றனர். வேளாண்மை அறிவியல் மைய உதவி பேராசிரியர் ராம்குமார் துவக்கி வைத்தார். உதவி பேராசிரியர் ஆரோக்கியமேரி பயிற்சியளித்தார்.

## செப்., 26ல் நாட்டுக்கோழி வளர்ப்பில் மூலிகை மருத்துவம் குறித்த பயிற்சி

நாமக்கல்: 'வரும், 26ம் தேதி, நாட்டுக்கோழி வளர்ப்பில், மூலிகை மருத்துவம் குறித்து ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது' என, கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத் தலைவர் கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் - திருச்சி சாலை கால்நடை மருத்துவமனை வளாகத்தில், கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையம் உள்ளது. இங்கு, வரும், 26ம் தேதி, மதியம், 1:30 மணிக்கு, பண்ணையாளர்களுக்காக, 'நாட்டுக்கோழி வளர்ப்பில் மழைக்கால பராமரிப்பு மற்றும் மூலிகை மருத்துவ முறைகள்' குறித்து ஒருநாள் பயிற்சி நடக்கிறது. விருப்பம் உள்ளவர்கள், அனைத்து கோழி பண்ணையாளர்களும் பங்கேற்று பயன்பெறலாம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## பார்த்திபனூர் மதகு அணை சுத்தம் செய்யும் பணி தீவிரம்

மானாமதுரை சிவகங்கை,ராமநாதபுர மாவட்ட பாசன தேவைக்காக கட்டப்பட்ட பார்த்திபனூர் மதகு அணை நீண்ட வருடங்களுக்கு பிறகு தினமலர் நாளிதழில் வெளியான செய்தியை அடுத்து சுத்தம் செய்யும் பணி 8 லட்ச ரூபாய் செலவில் நடக்கிறது.

பார்த்திபனூர் மதகு அணை ஒன்பது மதகுகளுடன் 1975ல் திறந்து வைக்கப்பட்டது. வலது பிரதான கால்வாய் மூலம் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 154 கண்மாய்களைச் சேர்ந்த 32 ஆயிரத்து 287 ஏக்கர் நிலம்,இடது பிரதான கால்வாய் மூலம் சிவகங்கை மற்றும் ராமநாதபுர மாவட்டங்களைச் சேர்ந்த 87 கண்மாய்கள் மூலம் 35 ஆயிரத்து 385 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. தேனி மாவட்டம் வருஷநாடு மலைப்பகுதியில் உற்பத்தியாகும் வைகை நதி மூலம் தேனி,ராமநாதபுரம் உள்ளிட்ட ஆறு மாவட்டங்கள் பயன்பெற்றாலும் வறட்சி மாவட்டங்களான சிவகங்கை, ராமநாதபுர மாவட்டங்கள் விவசாயம், குடிநீர் உள்ளிட்டவற்றிற்கு வைகை ஆற்றை நம்பியே உள்ளன.
விவசாய தேவைக்காக கட்டப்பட்ட பார்த்திபனூர் மதகு அணையின் உட்புறமும்

வெளிப்புறமும் கருவேல மரங்கள்,நாணல் புதர்கள் அதிகளவில் இருப்பதால் அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீரை இவைகளே உறிஞ்சி விடுகின்றன. இதனால் பாசனத்திற்கு போதுமான தண்ணீர் இன்றி விவசாயிகள் அவதிப்பட்டனர்.அணையை சுத்தம் செய்ய விவசாயிகள் வலியுறுத்தியது குறித்து தினமலர் நாளிதழில் செய்தி வெளியானது. இதனையடுத்து பொதுப் பணிக்துறை சார்பில் கடந்த ஐந்து நாட்களாக நாணல் மற்றும் கருவேல மரங்களை அகற்றும் பணி நடந்து வருகிறது.

பொதுப்பணித்துறை செயற் பொறியாளர் நாகரத்னம் கூறுகையில்: பார்த்திபனூர் மதகு அணையின் உட்புறமும் வெளிப்புறமும் தலா 700 மீட்டர் துாரத்திற்கு சுத்தம் செய்யும் பணி நடைபெறுகிறது. கருவேல மரங்கள், நாணல் புதர்கள் ஆகியவற்றை வேருடன் அகற்றி வரும் மழை காலத்திற்குள் அணையை சுத்தம் செய்ய திட்டமிடப்பட்டு பணிகள் நடக்கின்றன, என்றார்.

## உணவு பயிற்சி

காரைக்குடி,:செட்டிநாடு மானாவாரி ஆராய்ச்சி நிலையத்தில், சிறுதானியங் களிலிருந்து பேக்கரி உணவு தயாரித்தல் சம்பந்தமாக வரும் 22-ம் தேதி காலை 10 மணிக்கு பயிற்சி நடக்க உள்ளது. விருப்பமுள்ளவர்கள் 94429 20853 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். பயிற்சி கட்டணம் ரூ.400, என அதன் தலைவர் மெர்ட்டில் கிரேஸ் கூறியுள்ளார்.

## நாட்டுக்கோழிப்பண்ணை நிறுவ தமிழக அரசு ஆணை

தர்மபுரி: புதுவாழ்வு திட்ட உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில், சிறிய அளவு நாட்டுக்கோழிப்பண்ணை நிறுவ, அரசு ஆணையிட்டுள்ளது.

தர்மபுரி கலெக்டர் விவேகானந்தன் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழக அரசு, கோழிப்பண்ணைத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், கோழி அபிவிருத்தித் திட்டத்தினை, 25 கோடி ரூபாய் செலவில், 2016-17ம் ஆண்டிற்கு செயல்படுத்த ஆணை வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார திட்டத்தின் புதுவாழ்வு உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில், சிறிய அளவு

நாட்டுக்கோழிப்பண்ணை நிறுவ தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், 100 எண்ணிக்கையிலான நாட்டுக்கோழிகளை பயனாளியின் புழக்கடையிலேயே வளர்க்க தேவையான கோழிக்கூண்டு, வேலி அமைத்தல், அசோலா உற்பத்தி, தீவனம் மற்றும் நான்கு வார வயதுள்ள கோழிக்குஞ்சுகள் வாங்க ஆகும் மொத்த செலவில், 25 சதவீதம் மானியம், தமிழக அரசு வழங்கவுள்ளது. மேலும், தீவனச்செலவைக் குறைப்பதற்கும், உள்ளூர் சந்தையில் கிடைக்கும் பொருட்களைக்கொண்டே கோழித்தீவனம், பயனாளிகளே தயாரிப்பதற்கும் ஏதுவாக, பத்து பயனாளிகளுக்கு தலா, ஒரு தீவன அரவை இயந்திரம் வழங்கப்படவுள்ளது. புதுவாழ்வு திட்ட அதிகாரிகளிடம், உறுப்பினர்கள் விண்ணப்பங்களை வழங்கலாம். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மானாவாரி பயிர் பாதுகாப்பு பயிற்சி

தர்மபுரி: பாப்பாரப்பட்டியில், மானாவாரி பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது. தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் மானாவாரி பயிர்களை வறட்சியிலிருந்து பாதுகாக்க வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கான தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது. முகாமிற்கு வேளாண்மை இணை இயக்குனர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் சண்முகம் வரவேற்றார். பயிற்சி முகாமில், மானாவாரியில் சாகுபடி செய்யக்கூடிய அனைத்து வகை பயிர்களுக்கும் நுண்ணூயிர் உரம் 1 சதவீத கரைசலை விதை நேர்த்தி செய்து விதைப்பது நல்லது. அல்லது பயிரின் வளர்ச்சிக் காலத்தில் 30 மற்றும் 45ம் நாட்களில் இலையின் வழியாக தெளிப்பதன் மூலம் பயிரின் வளர்ச்சி அதிகரிக்கும். இதன் மூலம் பயிர்களை வறட்சியிலிருந்து பாதுகாக்க முடியும் என தெரிவிக்கப்பட்டது.

## ரூ.59 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

மொடக்குறிச்சி, : மொடக்குறிச்சி சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 2 ஆயிரத்து 116 மூட்டைகளில் 1 லட்சத்து 4 ஆயிரத்து 3 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.இதில் முதல் தர கொப்பரை அதிகபட்ச விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ.60.35க்கும், குறைந்தபட்ச விலை ரூ.58.35 க்கும், இரண்டாம் தர கொப்பரை அதிகபட்ச விலை கிலோ ஒன்றுக்கு ரூ.56.15 க்கும் குறைந்த பட்சவிலை ரூ.44.00க்கும் என மொத்தம் ரூ.57 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

மேலும் 10 ஆயிரத்து 300 கிலோ எடையுள்ள 24 ஆயிரத்து 695 தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில் அதிக விலை டன் ஒன்றுக்கு ரூ. 17 ஆயிரத்து 310, குறைந்த விலை டன் ஒன்றுக்கு ரூ.16 ஆயிரத்து 340 என ரூ.1 லட்சத்து 64 ஆயிரத்துக்கு ஏலம் போனது. தேங்காய் ஒன்றுக்கு ரூ.5.26 முதல் ரூ.8.25 வரை விலை போயிருந்தது.

## 2வது மண்டல பாசனத்துக்காக திருமூர்த்தி அணையில் தண்ணீர் திறப்பு

உடுமலை, : இரண்டாவது மண்டல பாசனத்துக்காக திருமூர்த்தி அணையில் இருந்து நேற்று காலையில் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதன் மூலம் 94,201 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. திருப்பூர் மாவட்டம், உடுமலை அருகே உள்ள திருமூர்த்தி அணை மூலமாக கோவை, திருப்பூர் மாவட்டங்களில் 4 லட்சம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. நான்கு மண்டலங்களாக பிரித்து தண்ணீர் வழங்கப்படுகிறது. முதல் மண்டல பாசனம் முடிந்த நிலையில், இரண்டாவது மண்டல பகுதிகளுக்கு தண்ணீர் திறந்துவிட முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் உத்தரவிட்டார். இதையடுத்து, நேற்று காலையில் அணையிலிருந்து பிரதான கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதில் அமைச்சர் ராதாகிருஷ்ணன், மகேந்திரன் எம்பி, மடத்துக்குளம் திமுக எம்எல்ஏ ஜெயராமகிருஷ்ணன், காங்கயம் எம்எல்ஏ தனியரசு, முன்னாள் எம்எல்ஏ சண்முகவேலு, கலெக்டர் ஜெயந்தி, பொதுப்பணித்துறை பொறியாளர்கள் இளங்கோவன், சந்திரன், முத்துசாமி, தன்ராஜ், ஜெயசீலன் ஆகியோர்

பங்கேற்றனர்.

அணையில் இருந்து வினாடிக்கு 1,159 கன அடி நீர் திறக்கப்பட்டது. உரிய இடைவெளிவிட்டு மொத்தம் 3,900 மில்லியன் கனஅடி நீர் திறக்கப்பட உள்ளது. இதன் மூலமாக கோவை மாவட்டத்தில் 23 ஆயிரம் ஏக்கர், திருப்பூர் மாவட்டத்தில் 70,800 ஏக்கர், தளி வாய்க்கால் மூலமாக எட்டு குளம் பாசன பகுதி என மொத்தம் 94 ஆயிரத்து 201 ஏக்கர் பாசன வசதி பெறும் என அதிகாரிகள் தெரிவித்தனர். 60 அடி உயரம் கொண்ட திருமூர்த்தி அணையில் நேற்று காலை நீர்மட்டம் 58.25 அடியாக இருந்தது.

## ரூ.18 லட்சத்துக்கு சூரியகாந்தி விதை ஏலம்

வெள்ளக்கோவில், :வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நடந்த ஏலத்தில் ரூ.18.17 லட்சத்துக்கு சூரியகாந்தி விதை ஏலம் போனது. வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஒவ்வொரு வாரமும் சூரியகாந்தி விதை ஏலம் நடப்பது வழக்கம். இப்பகுதி விவசாயிகள் சூரியகாந்தி விதைகளை விற்பனைக்காக இங்கு கொண்டு வருகின்றனர்.அதிகாரிகள் முன்னிலையில் டெண்டர் மூலம் ஏலம் நடைபெறுகிறது. 1,084 மூட்டைகளில் 52 ஆயிரத்து 770 கிலோ அளவிலான விதைகள் வந்திருந்தன.இவை அதிகபட்சமாக ஒரு கிலோ ரூ.36.66க்கும், குறைந்தபட்சமாக ரூ,30.19க்கும் ஏலம்போனது. மொத்தம் 18 லட்சத்து 17 ஆயிரத்து 46க்கு விற்பனையானதாக விற்பனைக்கூட மேற்பார்வையாளர் தெரிவித்தார்.

## வேளாண் பொறியியல் துறை மூலம் மானிய விலையில் விவசாய கருவிகள்

ஊட்டி: வேளாண்மையை இயந்திரமயமாக்கும் திட்டத்தின் கீழ் பல்வேறு வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் வாங்க நடப்பாண்டில் ரூ.31 கோடியே 6 லட்சம் மானியம் வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் பவர் டிரில்லர், சுழற்கலப்பை, குழி தோண்டும் கருவி, விசை களையெடுக்கும் இயந்திரம், தட்டை வெட்டும் கருவி, விசை தெளிப்பான்கள், டிராக்டர் மற்றும் பவர் டில்லர் ஆகியவற்5 இயக்கப்படும் இதர வேளாண்மை கருவிகளும், இயந்திரங்களும் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

இத்திட்டத்தில் சிறு, குறு ஆதிதிராவிட பழங்குடி மக்கள் மற்றும் பெண்

விவசாயிகளுக்கு 50 சதவீதம் வரையும், இதர விவசாயிகளுக்கு 40 சதவீதம் வரையும் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். விவசாயிகள் தங்களுக்கு தேவைப்படும் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வேளாண் பொறியியல் துறையால் ஒப்புதல் மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்ட உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து தங்களின் முழு விருப்பத்தின் அடிப்படையில் ேதர்வு செய்து மானிய உதவியுடன் வாங்கி பயனடையலாம்.

இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள் ஊட்டி ரோஜா பூங்கா அருகே உள்ள வேளாண்மை பொறியியல்துறை செயற்பொறியாளர் அலுவலகம் அல்லது குன்னூர், கூடலூர் பகுதிகளில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களை அணுகி விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 2, ஆதார் அட்டை நகல், சிட்டா அடங்கல் நகல், புல வரைபட நகல், சிறு, குறு விவசாயிகளுக்கான சான்று, ஜாதிச் சான்றின் நகல், டிராக்டரில் இயங்ககூடிய கருவிகளாக இருப்பின் டிராக்டரின் பதிவு சான்றின் நகல் ஆகியவற்றை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

வேளாண்மை பொறியியல் துறையின் அனுமதி கடிதம் கிைடக்கப் பெற்றவுடன் ேதர்வு செய்த கருவிகள், வேளாண் இயந்திரம் ஆகியவற்றிற்குரிய முழு தொகையும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு கேட்பு வரைவோலை மூலமாக வழங்கப்படும். வேளாண் இயந்திரங்கள், கருவிகளை விவசாயிகள் பெற்ற பின்னர், அதனை வேளாண் பொறியியல் துறை அலுவலர்கள் உறுதி செய்து அதற்குரிய முழு மானியத் தொகையும் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்துவார்கள். நீலகிரி மாவட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.27.77 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மானிய விலையில் கருவிகள், இயந்திரங்கள் பெற விரும்பும் விவசாயிகள் உடனடியாக வேளாண் பொறியியல் துறையில் பதிவு செய்து பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சம்பா தொகுப்பு திட்டத்தின்கீழ் அனைத்து விதைநெல் ரகங்களுக்கும் ரூ.10 மானியம்

பட்டுக்கோட்டை: சம்பா தொகுப்பு திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் விதை நெல் ரகங்களுக்கு கிலோ 1க்கு ரூ.10 வீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதில் பயன்பெற விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழக முதல்வர் அறிவித்துள்ள சம்பா தொகுப்பு திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் அனைத்து விதை நெல் ரகங்களுக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.10 வீதம் மானியம் வழங்கப்படுகிறது. நடப்பாண்டு மேட்டூர் அணையில் போதிய அளவு நீர் இருப்பு இல்லாததால் சம்பா நடவு பணிக்கு காலத்தில் தண்ணீர் திறந்துவிட முடியாத நிலையில் தமிழக முதல்வரால் நேரடி நெல் விதைப்பு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அதன்படி விநியோகிக்கப்படும் அனைத்து வகையான விதை நெல் ரகங்களுக்கும் கிலோ 1க்கு ரூ.10 வீதம் மானியம் அனுமதிக்கப்பட்டு வருகிறது. திருவோணம், சோழகன்கரை மற்றும் வெங்கரை வேளாண்மை விரிவாக்க மையங்களில் சி.ஆர் 1009, கோ 50, ஆடுதுறை 39, ஆடுதுறை 49 மற்றும் சுவர்ணாசப் 1 ஆகிய நெல் ரகங்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நேரடி விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 30 கிலோ வீதமும், விதைப்பு கருவி மூலம் விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 16 கிலோ வீதமும், நாற்றுவிட்டு நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 20 கிலோ வீதமும், பாய்நாற்றங்கால் அமைத்து இயந்திர நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 10 12 கிலோ வீதமும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்ட இனத்தின்கீழ் திருவோணம் வட்டாரத்துக்கு பொருள் இலக்காக 55 டன்னும், நிதி இலக்காக ரூ.5.50 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே வேளாண்மை உதவி அலுவலர்களை விவசாயிகள் தொடர்பு கொண்டு மானிய பரிந்துரை விண்ணப்பம் பெற்று பயன்பெறலாம்.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

திருத்துறைப்பூண்டி: தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத் துறை மன்னார்குடி கோட்டம் சார்பில் திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் 11வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் கடந்த 1ம் தேதி முதல் நடந்து வருகிறது. நெடும்பலம், ஆதிரெங்கம் கிராமங்களில் கால்நடை மருத்துவர் ராமலிங்கம் தலைமையில் கால்நடை உதவி மருத்துவர்கள் காவியா, சுரேந்தர், விஜேந்தர் கொண்ட மருத்துவ குழுவினர் கால்நடைகளுக்கு தடுப்பூசி செலுத்தினர். ஊராட்சி மன்ற தலைவர்கள் அப்துல்முனாப், விஜயா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## இறவையில் பயிரிட கோ7 கம்பு உகந்தது வேளாண்துறை ஆலோசனை

பழநி: இறவையில் பயிரிட கோ7 கம்பு ஏற்ற ரகமாகும் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்ததாவது: ‘‘இறவையில் கம்பு பயிரிடுவதற்கு கோ 7, கோ (சியு) 9, ஐசிஎம்வி 221, ராஜ் 171, எக்ஸ் 7 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். ஹெக்டேருக்கு 3.75 கிலோ விதை இட வேண்டும். ஹெக்டேருக்கு 7.5 சென்டில் நாற்றாங்கால் அமைக்க வேண்டும். 3*1.5மீ அளவு கொண்ட 6 படுக்கைகளை 1 சென்டில் அமைத்து அரை மீட்டர் கால்வாய் அரை அடி ஆழத்தில் ஒவ்வொரு படுக்கையை சுற்றியும் அமைக்க வேண்டும். ஹெக்டருக்கு 750 கிலோ தொழுஉரம் இட வேண்டும். தேன் ஒழுகல் நோய் பாதித்த விதைகளை நீக்க 10 லிட்டர் நீரில் 1 கிலோ உப்பினை கரைத்து விதைகளை அதில் கொட்டி மிதக்கும் விதைகளை நீக்கி, நல்ல தண்ணீர் கொண்டு 3 அல்லது 4 முறை கழுவி நிழலில் உலர்த்த வேண்டும்.

தண்டு ஈ மற்றும் தண்டு துளைப்பான் நோய் பாதிப்பை தடுக்க வேளாண் அதிகாரிகளை ஆலோசித்து விதை முலாம் பூச வேண்டும். அடிச்சாம்பால் நோய் தாக்குதலில் இருந்து தப்பிக்க மெட்டலாக்சில் 6 கிராமுடன், 5 மில்லி தண்ணீர் சேர்த்து, 1 கிலோ விதையுடன் கலக்க வேண்டும். 600 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பேக்டீரியாவுடன் 1 எக்டேருக்கு உண்டான விதையை கலந்து உயிர்உரமாக விதைக்க வேண்டும். விரல்களால் 1 சென்டிமீட்டர் ஆழத்திற்கு கோடுகள் இட்டு, ஒரு படுகைக்கு அரை கிலோ விதையினை தூவி மண்ணில் மூட

வேண்டும். மிதைல் பாரதியான் மருந்தினை விதைத்தவுடன் தூவி எறும்புகளில் இருந்து பாதுகாக்கலாம்.

நாற்றுக்களை தண்டு ஈயிலிருந்து காப்பதற்கு கார்போபியூரான் 3ஜி 600 கிராம் அல்லது போரேட் 10ஜி180கிராம் தூவி இட வேண்டும். 30 சென்டிமீட்டர் கால்வாய் மூலம் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். மண்ணில் நீர் உறிஞ்சிம் வரை மட்டுமே நீர்ப்பாய்ச்ச வேண்டும். வேளாண் அலுவலர்களின் அறிவுரையின் படி 45*15 செண்டிமீட்டர் இடைவெளியில், 3 முதல் 5 செண்டிமீட்டர் ஆழத்தில் பார்களின் பக்கவாட்டில் வேர்களை 40 லிட்டர் நீரில் 1000 கிராம் அசோஸ்பைரில்லம் கலந்த கலவையில் 30 நிமிடம் நனைத்து அதன்பின் நட வேண்டும். ரகங்களுக்கும், வீரிய ஒட்டுரகங்களுக்கும் அதற்கேற்ற அளவுகளில் உரமிட வேண்டும். இதுதொடர்பான கூடுதலான விபரங்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ, வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அணுகலாம்'' இவ்வாறு தெரிவித்தனர்.

## களைக்கொல்லிகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம் விதைச்சான்று உதவி இயக்குநர் தகவல்

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்டத்தில் களைக்கொல்லிகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் சேக் அப்துல்லா தெரிவித்தார். ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆண்டு தோறும் வடகிழக்கு பருவமழை காலத்தில் சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் பயிரிடப்படுகிறது. தற்போது மழை ஆங்காங்கே பெய்து வருவதால் மாவட்டம் முழுவதும் நெல் விதைப்பு பணிகள் பரவலாக நடந்து வருகிறது.

மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தரமான நெல் விதைகள் வழங்கும் பொருட்டு ஆண்டுதோறும் வேளாண்மைத்துறையின் மூலம் விவசாயிகள் நிலத்தில் விதைப்பண்ணைகள் அமைத்து சான்று விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு மீண்டும் விவசாயிகளுக்கு விதைகளாக வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் இம்மாவட்டத்தில் 720 ஹெக்டேர் பரப்பளவில் நெல் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டு 1741 மெட்ரிக்டன் நெல் விதைகள் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் பெரும்பாலும் மானாவாரியாகவே நெல் சாகுபடி செய்யப்படுகிறது. மானாவாரி நெல் சாகுபடியில் சரியான தருணத்தில் களைகளை கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். நெற்பயிரில் பூச்சிகள் தாக்குதலினால் வரும் சேதாரத்தை விட களைகளினால் வரும் சேதாரம் அதிகமாக உள்ளது.

வேளாண் உற்பத்தியில் மொத்த ஆண்டு இழப்பில், களைகளால் 45 சதவிகிதமும், பூச்சிகளினால் 30 சதவிகிதமும், நோயினால் 20 சதவிகிதமும் இழப்பு ஏற்படுகிறது. நெற்பயிரில் களை கட்டுப்பாடு மிகவும் முக்கியமானதாகும். சரியான தருணத்தில் களைகளை கட்டுப்படுத்தாவிடில் களைகள் நெற்பயிருடன் நீர், சூரியஒளி மற்றும் சத்துக்களுக்காக போட்டியிட்டு பயிர் விளைச்சலை வெகுவாக குறைக்கிறது. நெற்பயிரில் களைகள் மூன்று முறைகளில் கட்டுப் படுத்தலாம். முதலாவதாக நெல் விதைப்பற்கு முன் ஒரு மாதத்திற்கு முன் வயலில் காணப்படும் களைகள் மீது கிளைப்போசேட் என்ற களைக்கொல்லி மருந்தினை ஒரு ஏக்கருக்கு 1 லிட்டர் வீதம் 200 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண் டும். களைக்கொல்லி தெளித்த நாளிலிருந்து 10 நாட்களுக்குள் வயலில் உள்ள களைகள் கருகி மடிந்து விடும். களைகள் மடிந்த பின் நிலத்தினை உழவு செய்து நெற்பயிர் விதைப்பினை மேற்கொள்ளலாம்.

இரண்டாவதாக நெல் விதைகள் விதைத்த 3ம் நாளில் களைகள் முளைப்பதற்கு முன்பு பூட்டாகுளோர் என்னும் களைக்கொல்லியினை ஒரு ஏக்கருக்கு ஒரு லிட்டர் அல்லது பிரடிலா குளோர் ஒரு ஏக்கருக்கு 500 மிலி வீதம் 20 கிலோ நன்கு காய்ந்த மணலுடன் கலந்து நிலத்தில் போதிய ஈரப்பதம் இருக்கும் சமயத்தில் பரவலாக தூவ வேண்டும். இவ்வாறு செய்வதினால் நெற்பயிரில் தோன்றும் பெரும்பாலான களைகள் முளைப்பதற்கு முன்பாகவே கட்டுப்படுத்தப்படுகிறது.

மூன்றாவதாக நெல் வயலில் களைகள் முளைப்பதற்கு முன் இட வேண்டிய களைக்கொல்லி பயன்படுததாத பட்சத்தில், பயிர் முளைத்து 25 முதல் 35 நாட்களுக்குள், களைகள் முளைத்து மூன்று முதல் ஐந்து இலைப் பருவத்தில் பிஸ் பைரிபேக் சோடியம் என்ற களைக்கொல்லி மருந்தினை ஏக்கருக்கு 100 மிலி வீதம் 200லிட்டர் நீரில் கலந்து காலை அல்லது மாலை வேளையில் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும். இக்களைக்கொல்லியினை பயன்படுத்துவதால் நெல் வயலில்

காணப்படும் முளைத்த களைகள் திறம்பட கட்டுப்படுத்தப்படுகிறது. நெல் பயிருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை.

மேற்கூறிய களைக்கொல்லிகள் மட்டுமின்றி புதிய தலைமுறை களைக்கொல்லிகள் அதிகளவில் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குளோரிமியூரான்ஈத்தைல் என்னும் களைக்கொல்லி ஒரு ஏக்கருக்கு 8 கிராம் என்ற அளவில் பயன்படுத்தப்படுகிறது இக்களைக்கொல்லிகளை களைகள் முளைப்பதற்கு முன்பும் களைகள் முளைத்த பின்பும் மேற் கூறிய முறைகளில் பயன்படுத்தலாம். பொதுவாக நெல் சாகுபடியில் அதிக செலவினை ஏற்படுத்துவது களை மேலாண்மை ஆகும். தற்போது உள்ள சூழ்நிலைகளில் வேலையாட்கள் பற்றாக்குறையால் களையெடுப்புக் கூலி அதிகமாகவும் மற்றும் தக்க சமயத்தில் களையெடுக்க இயலாத நிலையும் உள்ளது. ஆதலால் இதற்கு மாற்றாக விவசாயிகள் மேற்கூறிய களைக்கொல்லிகளை பயன்படுத்தி களைகளை கட்டுப்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் சேக் அப்துல்லா கூறினார்.